**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Vaikasi Thingal 15th day

Friday the 29th day of May 2026

Calender Case No.99/2022
CNR No.TNPD01-001009-2022

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | Elayangui P.S. in Cr.No.376/2021 u/s 8(c) r/w 20(b)(ii)(B), 25 of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | 1) Mohad Ibrahim (Died)<br>2) Marsook Ali<br>3) Raja |
| 4. | Father's Name /Husband Name | 1) Khajamoydeen<br>2) Peer Mohamed<br>3) Sinnalu |
| 5. | Occupation | 1) Coolie<br>2) Coolie<br>3) Coolie |
| 6. | Residence | 1) 22/A, Seethurani Road, Ilaiyangudi.<br><br>2) 23, Pakkeer Rauther Street, Ilaiyangudi.<br><br>3) Indira Nagar Colony, Ilaiyangudi Taluk, Sivagangai Dist. |
| 7. | Age | 1) 29<br>2) 36 |

| | | |
|---|---|---|
| | | 3) 27 |
| | **<u>Date of</u>** | |
| 8. | Occurrence | 02.09.2021 |
| 9. | Complaint | 02.09.2021 |
| 10. | Apprehension | 1) ---<br>2) 02.09.2021<br>3) A/B |
| 11. | Release on bail | 1) ---<br>2) 01.10.2021<br>3) 25.04.2022 A/B |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 06.05.2026 |
| 14. | closure of trial | 27.05.2026 |
| 15. | Sentence or order | 29.05.2026 |
| 16. | Service of copy of Judgment or finding on accused. | 29.05.2026 |
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **Chief** **Cross**<br>1) 06.05.2026 – 06.05.2026<br>2) 19.05.2026 – 19.05.2026<br>3) 26.05.2026 – 26.05.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 27.05.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |

| | | |
|---|---|---|
| 23. | The Period of remand of the Accused | 1) ----<br>2) 02.09.2021 – 01.10.2021<br>3) A/P |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 12.05.2022 |

இவ்வழக்கு 27.05.2026-ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது வழக்கறிஞர் திரு. எம். பாலசுப்பிரமணியன், M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.மணிகண்டன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 02.09.2021-ம் தேதி 10.00 மணிக்கு இவ்வழக்கின் 2, 3 எதிரிகள் இளையான்குடி புறவழிச்சாலையில் உள்ள ஹைபுரோ ஐவுளிக்கடை பின்புறம் உள்ள GSC சிட்டி பிளாட் என்ற இடத்தில் TN 63 BA 6418 Yamaha என்ற இருசக்கர வாகனம் மற்றும் TN 63 BE 1903 என்ற மாற்றுத்திறனாளி வாகனத்திலும் சுமார் ரூ.11,000/- மதிப்புள்ள 1.100 கிகி எடை கொண்ட கஞ்சாவை எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B), 25 of NDPS Act 1985-ன் இளையான்குடி காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 2, 3 எதிரிகளுக்கு இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட்டன.

3. 2, 3 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், 2, 3 எதிரிகள் மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ 2, 3 எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.15 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் சா.பொ.1 முதல் சா.பொ.4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு–**

(i) அசா.1 திரு.மகாலிங்கம் தனது சாட்சியத்தில் கடந்த 02.09.2021–ம் தேதி இளையான்குடி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது காலை 10.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் பாலமுருகன் அவர்களும் தானும், காவலர்கள் மலையரசன், சுந்தர், முனியசாமி ஆகியோர் கஞ்சா சம்பந்தமாக தனிப்படை அமைத்து சார்பு ஆய்வாளர் பாலமுருகனுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி இளையான்குடி புறவழிசாலையில் ஹைப்ரோ ஜவுளிக்கடை பின்புறம் உள்ள GSC city block அருகில் காலை 10.30 மணிக்குசென்ற போது

அங்கு நின்று கொண்டிருந்த 3 நபர்களை பிடிக்க சென்ற போது 2 பேரை பிடித்தோம் என்றும், ஒருவர் அங்கிருந்து ஓடி விட்டார் என்றும், பிடிபட்ட 2 நபர்களை பிடித்து பேர் விலாசம் கேட்க அதில் ஒருவர் மாற்றுத்திறனாளி, அவர் 3 சக்கர வாகனத்தில் அமர்ந்திருந்தார் என்றும், அவர் பெயர் முகமது இப்ராகிம், த/பெ காஜாமைதீன், 2 வது நபர் பெயர் மர்சூக்அலி என்று தெரிவித்தார் என்றும், தப்பி சென்றவரை பற்றி விசாரிக்க அவர் பெயர் ராஜா, த/பெ சின்னாள், இளையான்குடி என தெரிவித்தார் என்றும், தாங்கள் கொண்டு சென்ற தராசில் முகமது இப்ராகிம் வைத்திருந்த பையில் கஞ்சா இருப்பதாக தகவலின் பேரில் அந்த பையை சோதனை செய்ய நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்து சென்று சோதனை செய்ய தங்களுக்கு உரிமை உள்ளது என்று கேட்டதற்கு நாங்களே சோதனை செய்யலாம் என சம்மதம் தெரிவித்தன் பேரில் சோதனை சம்மத கடிதம் கொடுத்து எதிரியிடம் கையொப்பம் பெற்று முகமது இப்ராகிம் வைத்திருந்த பையை சோதனை செய்த போது 1.100 kg கஞ்சா இருந்தது என்றும், மர்சூக்அலி என்பரிடம் கஞ்சா விற்ற பணம் 2,680 ரூபாய் பணம் இருந்தது என்றும், எந்த வித அரசு அனுமதியின்றி கஞ்சா வைத்திருந்த காரணம் சொல்லி எதிரிகளை 11.00 மணிக்கு கைது செய்தோம் என்றும், 11.30 மணிக்கு மேற்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் பாலமுருகன் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்என்றும், 12.00 மணிக்கு கைப்பற்றப்பட்ட கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் 2 மாதிரிகள் எடுத்து காக்கி பேப்பரில் மடித்து கட்டி சீல் வைத்தும், கஞ்சா சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார் என்றும், அதில் சாட்சிகளாக மலையரசன் மற்றும் முனியசாமியும் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றும், 12.45 மணிக்கு சார்பு ஆய்வாளர் எதிரி மர்சூக்அலி என்பரிடம் கஞ்சா விற்ற பணம் 2,680–ஐ சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார் என்றும், அதில் சாட்சிகளாக மலையரசன் மற்றும் முனியசாமியும் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றும், வாகனம் TN 63 BA 6418 yamaka இரு சக்கர வாகனம், TN 63 BE 1903 மூன்று

சக்கர வாகனம் 13.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றும், 13.30 மணிக்கு எதிரி மற்றும் தடய சொத்துகளுடன் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் தனிஅறிக்கையுடன் மேல் நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்க உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) அசா.2 திரு.பாலமுருகன் தனது சாட்சியத்தில் கடந்த 02.09.2021–ம் தேதி சிவகங்கை இளையான்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது தனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி இளையான்குடி ஐபுரோ ஐவுளி கடை பின்புறமுள்ள GST City என்ற இடத்தில் கஞ்சா விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் தன்னுடன் பணிபுரிந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.மகாலிங்கம் காவலர்கள் சுந்தரர், மலையரசன், முனியசாமி ஆகியோர்களை உடன் அழைத்து கொண்டு வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் சம்பவ இடத்திற்கு காலை 10.00 மணிக்கு சென்று கண்காணித்தபோது அங்கு சந்தேகத்திற்கிடமாக இருந்த மூன்று சக்கர வாகனத்தில் அமர்ந்துள்ள இப்ராகிம், த/பெ.காஜா முகைதீன் 2) மசுத்அலி, த/பெ.பீர் முகமது மற்றும் ராஜா, த/பெ.சின்னால் ஆகியோரை சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்டபோது அங்கிருந்து ராஜா என்பவர் தப்பி ஓடி சென்று விட்டார் என்றும், பின்னர் மற்ற எதிரிகளிடம் கஞ்சா என்னும் போதை பொருள் சம்பந்தமாக தாங்கள் விற்பதாக தகவல் வந்துள்ளது உங்களையும் அரசிதழ் பதிவு பெற்ற நீதித்துறை நடுவர் முன்பாக சோதனை செய்ய கேட்க தங்களுக்கு உரிமையுள்ளது என்று கேட்டதற்கு அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன் பேரில் தனித்தனியாக சோதனை சம்மத கடிதம் தயார் செய்தோம் என்றும், அவற்றில் அந்தெந்த எதிரிகள் அவர்களின் சோதனை சம்மத கடிதத்தில்

தனித்தனியாக கைரேகை மற்றும் கையொப்பம் செய்தார்கள் என்றும், அந்த சோதனை சம்மத கடிதங்களில் சாட்சியாக முனியசாமி மற்றும் மலையரசன் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும், இரண்டு சோதனை சம்மத கடிதங்கள் முறையே அதசாஆ.1, 2 என்றும், இப்ராகிம் வைத்திருந்த பையை திறந்து பார்த்தபோது அதில் பொட்டலங்களில் பூ, விதை, காம்புகள் உடைய கஞ்சா இருந்தது என்றும், தான் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.100 கிகி கஞ்சா இருந்தது என்றும், மேலும் மர்சுத்அலி என்பரை சோதனை செய்ய கஞ்சா விற்ற பணம் ரூ.2,680/- இருந்தது என்றும், பின்பு எதிரிகள் இருவருக்கும் கஞ்சா விற்ற காரணம் கூறி கைது அறிவிப்பு கடிதங்கள் தனித்தனியாக கொடுத்து மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைது செய்தேன் என்றும், அதற்கான கைது அறிவிப்பு கடிதங்கள் அதசாஆ.3, 4 என்றும், 1-வது எதிரி இப்ராகிம் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் 11.30 மணிக்கு பதிவு செய்தேன் என்றும், எதிரி இப்ராகிம் வைத்திருந்த கஞ்சாவின் மாதிரிக்காக தலா 50 கிராம் விதம் எடையுள்ள இரண்டு மாதிரிகள் எடுத்து SHO சீல் வைத்து அதற்கு S1, S2 என குறியீடு செய்து SHo சீல் வைத்தேன் என்றும், கஞ்சா மற்றும் மாதிரிகள் அத்தாட்சி தயார் செய்து மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பகல் 12.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன் என்றும், அதற்கான அத்தாட்சி அதசாஆ.5 என்றும், பின்பு மர்சுத் அலி கஞ்சா விற்று வைத்திருந்த பணம் ரூ.2,680/- ஐ மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பகல் 12.45 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன் என்றும், அதற்கான அத்தாட்சி அதசாஆ.6 என்றும், பின்பு எதிரிகள் குற்ற செயலுக்கு பயன்படுத்திய ஒரு இரண்டு

இருசக்கர வாகனம் மற்றும் ஒரு மூன்று சக்கர வாகனம் ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன் என்றும், அதற்கான அத்தாட்சி அதசாஆ.7 என்றும், எதிரிகள் மற்றும் தடய சொத்துக்களுடன் நிலையம் வந்து 13.30 மணிக்கு தனி அறிக்கை தயார் செய்து மேல் நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளர் வசம் எதிரிகள் மற்றும் சொத்துக்களை ஒப்படைத்தேன் என்றும், தனி அறிக்கை அதசாஆ.8 என்றும், வழக்கு கோப்பை மேல் நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளர் திரு.அழகர் அவர்களிடம் ஒப்படைத்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(iii) அசா.3 திரு.அழகர் தனது சாட்சியத்தில் கடந்த சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது சார்பு ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் 57 அறிக்கையுடன் எதிரிகள் முகம்மது இப்ராகிம், மசுத் அலி ஆகியோருடன் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 1.100 கிகி கஞ்சா மற்றும் பணம் ரூ.2,680/- மற்றும் இருசக்கர வாகனம் TN 63 DA 6418 Yamaga மற்றும் TN 63 BE 1903 தன்னிடம் ஆஜர் செய்தார் என்றும், அவர் சமர்ப்பித்த NDPS Act-ன்படியான 57 ன்படியான அறிக்கை அதசாஆ.8 என்றும், 02.09.2021-ம் தேதி 13.30 மணிக்கு இளையான்குடி காவல் நிலைய குற்ற எண்.376/2021 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், சாட்சிகளாகிய சார்பு ஆய்வாளர் பாலமுருகன், சிறப்பு சார்பு ஆய்வாளர் மகாலிங்கம், காவலர் மலையரசன், காவலர் சுந்தர், காவலர் முனியாசி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்பு எதிரிகள் மற்றும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், பின்பு 03.02.2022-ம் தேதி தலைமை காவலர்

அழகுபூபதி மூலமாக மாதிரிக்கு எடுக்கப்பட்ட 50 கிராம் மாதிரி கஞ்சாக்களை 1 கிலோ கஞ்சா பணம் ரூ.2,680/– மற்றும் இருசக்கர வாகனத்தையும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து RP No.33/2022 பெற்றேன் என்றும், அதற்கான படிவம் 95 அதசாஆ.9 என்றும், அன்றைய தினமே ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், அங்கிருந்து வரப்பெற்ற பகுப்பாய்வு அறிக்கை பெற்று அந்த பகுப்பாய்வு அறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், அதற்கான பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.10 என்றும், பின்பு 26.04.2022–ம் தேதி தலைமை காவலர் அழகுபூபதி பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் கோவிந்ராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றும் பகுப்பாய்வு அறிக்கையினை பெற்றேன் என்றும், பின்பு எதிரிகள் மீது வழக்கு கோப்பினை பரிசீலித்தும் ஆவணங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act–ன்படி வழக்கிட்டுள்ளதில் சட்டபிரிவு மாறுதல் செய்தும் 8(c) r/w 20(b)(ii)(B), 25 of NDPS Act–ன்படி சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை செய்தேன் என்றும், அதற்கான சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.11 என்றும், பின்னர் தனது புலன் விசாரணை முடித்தும் சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீது 8(c) r/w 20(b)(ii)(B), 25 of NDPS Act–ன்படி 26.04,2022–ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், எதிரிகளிடமிருந்து கஞ்சா கடத்த பயன்படுத்திய இருசக்கர வாகனம் (எண்ணிகை 2) சாபொ.1, 2 என்றும், கஞ்சா விற்ற பணம் ரூ.2,680/– சாபொ.3 என்றும், நீதித்துறை நடுவர் சான்றொப்பம் செய்த சொத்து விவர பட்டியல் Annexure I அதசாஆ.12 என்றும், நீதித்துறை நடுவர் சான்றொப்பம் செய்த சொத்து விவர பட்டியல் Annexure II

அதசாஆ.13 என்றும், நீதித்துறை நடுவர் சான்றொப்பம் செய்த புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) அதசாஆ.14 வரிசை என்றும், பகுப்பாய்வுக்கு பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள கஞ்சா இந்நீதிமன்ற உத்தரவுப்படி Drugs disposal Committee மூலம் அழிக்கப்பட்டது என்றும், அதற்கான CRlmp No.721/2025 Dt.01.03.2025 அதற்கான CRlmp No.721/2025 உத்தரவு நகல் அதசாஆ.15 என்றும், நீதிமன்றத்தில் கஞ்சாவினை அழிப்பதற்கு முன்பாக எடுக்கப்பட்ட CS1 Sample ganja சாபொ.4 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 2, 3 எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, 2, 3 எதிரிகள் அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார். 2, 3 எதிரிகள் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, 2, 3 எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், 2, 3 எதிரிகள் மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B), 25 of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், 2, 3 எதிரிகள் மீதான u/s 8(c) r/w 20(b)(ii)(B), 25 of NDPS

Act 1985 ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே 2, 3 எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. 2, 3 எதிரிகளுக்கு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், 2, 3 எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் 2, 3 எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே 2, 3 எதிரிகளை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1 ஆக திரு. மகாலிங்கம் சிறப்பு சார்பு ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அசா2 ஆக சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 1 முதல் அசாஆ 8 வரையிலானவை குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா3 ஆக காவல் ஆய்வாளர் திரு. அழகர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார், அவர் மூலமாக அசாஆ 9 முதல் அசாஆ 15 மற்றும் சா.பொ.1 முதல் 4 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. 1 வது எதிரி இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது இயற்கையாக இறந்துவிட்டதால் இந்நீதிமன்ற 03.07.2024-ம் தேதிய உத்தரவின்படி அவர் மீதான வழக்கு அற்றுபோய்விட்டது.

13. அரசு தரப்பில் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் மகாலிங்கம் என்பவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் 02.09.2021-ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் பாலமுருகனுக்கு கிடைத்த தகவலின் பேரில் தானும், காவலர்கள் மலையரசன், சுந்தர், முனியசாமி ஆகியோர்களுடன் சார்பு ஆய்வாளர் பாலமுருகன் தலைமையில் இளையான்குடி புறவழி சாலையில் உள்ள ஜைபுரோ ஜவுளி கடை GSV City பிளாக் அருகில் காலை 10.30 மணிக்கு சென்றபோது அங்கு சந்தேகத்திற்கு இடமாக நின்ற 3 நபர்களை பிடிக்க அவர்களில் இருவர் பிடிப்பட்டதாகவும், ஒருவர் தப்பி ஓடிவிட்டதாகவும் , பிடிப்பட்ட இவரின் பெயரை விசாரிக்க அவர்கள் (1) முகமது இப்ராஉறிம் (2) மர்சூக்அலி என்றும் தப்பி ஓடியவர் பெயர் ராஜா என்றும் சொன்னதாகவும் முகமது இப்ராஉறிமிடம் சோதனை செய்ய அவரை நீதித்துறை நடுவர் இடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்து சென்று சோதனை செய்ய எதிரிகளுக்குள்ள உரிமைகளை எடுத்துக்கூறியும், 1வது எதிரி கொடுத்த ஒப்புதலின் அடிப்படையில் 1வது எதிரி அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தும் 1.100 கிகி கஞ்சாவை கைப்பற்றியதாகவும், 2வது எதிரியிடமிருந்து கஞ்சா விற்ற பணம் ரூ.2680/- ஐ கைப்பற்றியதாகவும் அவர்களிடம் அரசு அனுமதியின்றி கஞ்சா வைத்திருந்த காரணத்தை சொல்லி அவர்களை 11.00 மணிக்கு கைது செய்தும். 11.30 மணிக்கு 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும் 12.00 மணிக்கு கைப்பற்றப்பட்ட கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்காக மாதிரி எடுத்தும் பின்னர் 1,2 எதிரிகளுடனும் தடய சொத்துக்களுடனும், 2வது எதிரி கஞ்சாவிற்கு பயன்படுத்திய TN 63 BA 6418 என்ற எமகா இருசக்கர

வாகனம் மற்றும் TN 63 BE 1903 என்ற மூன்று சக்கர வாகனம் ஆகியவற்றை சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றியும் நிலையம் கொண்டு வந்தும் சோதனை நடவடிக்கை மேற்கொண்டது குறித்தும் சார்பு ஆய்வாளருக்கு தான் உதவியாக இருந்தது குறித்து அசா1 குறிப்பிட்டு சாட்சியம் முன்வைத்துள்ளார்.

14. இவ்வழக்கில், அசா2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பாலமுருகன் சார்பு ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் Raiding and Seizing Officer ஆவார். அவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் 02.09.2021–ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு தான் இளையான்குடி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது தனக்கு கிடைத்த தகவலின்பேரில் கிடைத்த தகவலை தனது உயர் அதிகாரிக்கு தெரிவித்தும், அனுமதி பெற்றும் சார்பு ஆய்வாளர், சிறப்பு சார்பு ஆய்வாளர் மகாலிங்கம் காவலர்கள் சுந்தர், மலையரசன், முனியசாமி ஆகியோர்களுடன் ைஜபுரோ ஜவுளி கடை பின்புறம் உள்ள GST City என்ற இடத்திற்கு 10.00 மணிக்கு சென்று கண்காணித்தபோது அ்ங்கு 1 முதல் 3 எதிரிகள் இருந்ததாகவும் , அவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்டபோது அவர்களில் ராஜா என்பவர் ஓடிவிட்டதாகவும் 1,2 எதிரிகளை பிடித்தும், சோதனை செய்ய எதிரிகளுக்குள்ள உரிமைகளை எடுத்துக்கூறியும் அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என கூறியதால் தனித்தனியே இரண்டு சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும், சோதனை செய்தும், அதில் 1வது எதிரி வைத்திருந்த பையில் இருந்த 1.100 கிகி கஞ்சாவையும், 2 வது எதிரி கஞ்சா விற்ற பணம் ரூ.2,680/–ஐயும் கைப்பற்றியும் அதுவகைக்கு 1,2 எதிரிகளுக்கு கைது நமூனா கொடுத்தும்,

கைப்பற்றிய கஞ்சாவிலிருந்து மாதிரிக்கென பகுப்பாய்வுக்கு எடுத்தும் பின்னிட்டு 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், பின்னர் எதிரிகளையும் தடய சொத்தையும் காவல் நிலையம் கொண்டு வந்தும் காவல் ஆய்வாளர் அழகர் முன்புக்கு அசாஆ 8 தனி அறிக்கையுடன் ஒப்படைத்ததாகவும், முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில், 1வது எதிரியுடன் சேர்ந்து 2வது எதிரி கஞ்சா விற்பனையில் ஈடுபட்டும் கஞ்சா விற்ற பணம் ரூ.2,680/– வைத்திருந்துள்ளது அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது.

15. மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், சாட்சிகளை விசாரித்தும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது பொறுத்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா2 இவ்வழக்கில் மேற்கொண்ட சோதனை குறித்தும் சோதனையின் அடிப்படையில் அசா1ன் முன்னிலையில் 2வது எதிரியிடமிருந்து அசா2 , 2வது எதிரி கஞ்சா விற்று கிடைத்த பணம் ரூ.2,680/–ஐ வைத்திருந்துள்ளதையும் அதுவகைக்கு 2வது எதிரி, 1வது எதிரியுடன் சேர்ந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுள்ளதும் அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

16. இந்நிலையில், சா.பொ.2( பைக் )மூன்று சக்கரம் கொண்ட வாகனம் 2வது எதிரி இவ்வழக்கில் கஞ்சா விற்பனைக்கு பயன்படுத்தியுள்ளது என்பது அசா1 முதல் 3–ன் சாட்சியத்தின் வழி நிரூபணம் செய்யப்பட்டுக்கவில்லை. ஏனெனில் , 2 வது எதிரியிடம் கஞ்சா விற்ற பணம் மட்டும் கைப்பற்றப்பட்டுள்ளது அரசு தரப்பில் நிரூபணம்

செய்யப்பட்டுள்ளது. அது வகைக்கு சா.பொ.1,2 இவ்வழக்கின் 2 எதிரியால் வழக்கு சம்பவத்திற்கு கஞ்சா விற்பனைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது அரசு தரப்பில் நியாய தர்ம அடிப்படையில் நிரூபணம் செய்யப்பட்டுக்கவில்லை.

17. இந்நிலையில், 3 வது எதிரி ராஜா சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடிவிட்டதாக அசா2 தன்னுடைய சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். அசா1 தன்னுடைய சாட்சியத்தில் 3 நபர்களில் ஒருவர் ஓடிவிட்டார் என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார். 3 வது எதிரியிடமிருந்து எந்த தடய பொருளும் கைப்பற்றப்பட்டு இருக்கவில்லை. தப்பி ஓடிய நபர் 3 வது எதிரி தான் என எவ்வகையில் எந்த ஆதாரத்தின் மூலம் அசா2 முடிவுக்கு வந்தார் என எந்த விளக்கமும் அசா2 ன் சாட்சியத்தில் சொல்லப்பட்டு இருக்கவில்லை. மேலும், 2 வது எதிரி தான் 1,2 எதிரிகளுடன் சேர்ந்து வழக்கு சம்பவத்தில், கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டு அதனை மெய்ப்பிக்கும் வகையில் சம்பவ சாட்சிகள் முன்பாக எந்த ஒரு அடையாள அணிவகுப்பும் 3 வது எதிரியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

18. மேலும், 1 வது எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 25 மற்றும் 27 ன் பிரகாரம் Leading to Recovery of case property ஆக இருக்கவில்லை என்பதால் 1 வது எதிரி அசா2 –டம் அசா1–ன் முன்னிலையில் கொடுத்ததாக சொல்லப்படம் ஒப்புதல் வாக்குமூலம் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்கத்தக்க ஒன்றாக அமைய பெறவில்லை .

19. எனவே, அரசு தரப்பில் முன் வைத்துள்ள சாட்சியத்தின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 54–ன் பிரகாரம் 2 வது எதிரி, சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் கஞ்சா விற்ற பணம் ரூ.2,680/–ஐ வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி எளிதில் அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது அந்த அனுமானத்தினை மறுத்து உரைக்கும் விதமாக இவ்வழக்கில் 2 வது எதிரி தரப்பில் NDPS சட்டப்பிரிவு 54 ன் பிரகாரம் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் 2 வது எதிரியால் முன்னிடப்பட்டிருக்கவில்லை.

20. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில், 2 வது எதிரி மீதான NDPS சட்டப்பிரிவு 25 of NDPS Act 1985 –ன் கீழான குற்றம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் மேலும், 2 வது எதிரி மீதான NDPS சட்டப்பிரிவு 8(c)r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் அசா1 முதல் அசா3 சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அசாஆ 1 முதல் அசாஆ 15 வரையிலான சான்றவாணங்களின் பிரகாரமும் சா.பொ.1 முதல் சா.பொ.4 ன் பிரகாரமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 3 வது எதிரியை குறித்ததான சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) ,25–ன் கீழான குற்றச்சாட்டு பொறுத்து அதனை மெய்ப்பிக்கும் வகையில் அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் போதுமான ஒன்றாக இருக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை 2 வது எதிரிக்கு சாதகமாக நல்கியும் சட்டப்பிரிவு 25 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என்றும் மேலும் 3 வது எதிரிக்கு சாதகமாக நல்கியும் சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B),25 –ன் கீழ்

தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் 2 வது எதிரி NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

22. ஆகவே 2 வது எதிரி சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என்று முடிவு செய்து, 2 வது எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து 2 வது எதிரியிடம் வினவ, 2 வது எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

| |
|---|
| எனது வயது 40 ஆகும். என்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும். |

ஆகவே, 2 வது எதிரியின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2022–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் , 2 வது எதிரி தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார் என்பதாலும் 2 வது எதிரியின் கோரிக்கையினை ஏற்றும், 2 வது எதிரிக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

23. முடிவாக 3 வது எதிரி ச/பி 8(c) r/w 20(b) (ii)(B),25 of NDPS Act 1985 ன்கீழான குற்றத்திற்கு குற்றவாளி அல்ல எனவும் மற்றும் 2 வது

எதிரி ச/பி 25 r/w 8(c)r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 ன்கீழான குற்றத்திற்கு குற்றவாளி அல்ல என முடிவு செய்தும் குவிமுச 235(1)/258 BNSS Act ன் கீழ் விடுதலை செய்தும் , 2 வது எதிரி 1985–ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9–01 ச–பி 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985 –ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் எதிரிக்கு 30 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/– விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், 2 வது எதிரி ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428 ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

2 வது எதிரி 02.09.2021 முதல் 01.10.2021 வரை சிறையில் இருந்துவந்துள்ளார் .

2 வது எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/– ஆகும்.

24. இவ்வழக்கில் ஆர்பிஎண்.33/2022–ல்

சா.பொ.4 கஞ்சாவை பொறுத்து இந்நீதிமன்ற சிஆர்எம்பி 721/2025 நாள் 01/03/2025–ம் தேதியன்று ஏற்பட்ட உத்தரவின்படிக்கு அழித்திருப்பின், அழித்தது போக மீதமுள்ள கஞ்சா இருப்பின் அதனை இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும்

சா.பொ.1 மற்றும் சா.பொ.2 இருசக்கர வாகனம் மற்றும் மூன்று சக்கர வாகனத்தை மனுதாரர்கள் இடைக்கால பிணையில் சிஆர்எம்பி 1630/2023 மற்றும் 67/2022 மூலம் பெற்றுச்சென்றுள்ளதால் அவற்றை அவர்களே வைத்துக்கொள்ளவும் மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும்

மேலும் சா.பொ.3 பணம் ரூ.2,680/– ஐ மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் அரசுடமை செய்து அரசுக்கு ஆதாயம் செய்தும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மே மாதம் 29–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM
Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.05.29 17:19:02 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**சாட்சி பட்டியல்–**

**அரசு தரப்பு சாட்சிகள்–**

அ.சா.1 – திரு.மகாலிங்கம், சிறப்பு சார்பு ஆய்வாளர்.

அ.சா.2 – திரு. பாலமுருகன், சார்பு ஆய்வாளர்.

அ.சா.3 – திரு. அழகர், காவல் ஆய்வாளர்.

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

அ.சா.ஆ.1 – சோதனை சம்மத கடிதம்

அ.சா.ஆ.2 – சோதனை சம்மத கடிதம்

அ.சா.ஆ.3 – கைது அறிவிப்பு

அ.சா.ஆ.4 – கைது அறிவிப்பு

அ.சா.ஆ.5 – அத்தாட்சி

அ.சா.ஆ.6 – அத்தாட்சி

அ.சா.ஆ.7 – அத்தாட்சி

அ.சா.ஆ.8 – பிரிவு 57–ன்படியான அறிக்கை

அ.சா.ஆ.9 – படிவம் 95

அ.சா.ஆ.10 – பகுப்பாய்வு அறிக்கை

அ.சா.ஆ.11– சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை Annexure II

அ.சா.ஆ.12 – Annexure I

அ.சா.ஆ.13 – Annexure II

அ.சா.ஆ.14 – புகைப்படங்கள் (எண்ணிக்கை 4)

அ.சா.ஆ.15 – Crlmp No.721/2024, dated 01.03.2025 உத்தரவு நகல்

<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u> –

சா.பொ.1 – TN 63 BA 6418 Yamaka இருசக்கர வாகனம்

சா.பொ.2 – TN 63 BE 1903 Scooty Pep மூன்று சக்கர வாகனம்

சா.பொ.3 – கஞ்சா விற்ற பணம் ரூ.2,680/–

சா.பொ.4 – மாதிரி கஞ்சா

<u>2, 3 எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்</u>–

இல்லை.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.05.29 17:19:14 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்

அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் 2, 3 எதிரிகள் பிணையில் இருக்கிறார்.

2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. 2 வது எதிரிக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.
3 வது எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

Fair/Draft
Judgment in C.C.99/2022
Dt.29.05.2026.